[12th November 1965

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இன்னும் எத்தனை சர்க்கரை ஆலைகள் துவக்க எண்ணமிடப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய எண்ணம் ஆறு சர்க்கரை ஆலைகள் வைக்க வேண்டும் என்பது. மத்திய சர்க்காருடைய எண்ணம் இன்னும் புரியவில்லை.

திரு. எஸ். முருகையன் : வட வேலூர் பகுதியில் ஆம்பூருக்கு அருகில் ஏற்கெனவே ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. அதற்கும் திருப்பத்தூருக்கும் கிட்டத்தட்ட 15 மைல் தூரம் தான். தென் வேலூர் மாவட்டத்தின் ஏராளமான கரும்பு சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, போளூர் தாலுக்காவிலோ, ஆரணி தாலுக்காவிலோ இந்தச் சர்க்கரை ஆலையை வைக்க சர்க்கார் முயற்சி செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதெல்லாம் நாம் எங்கு வேண்டுமானாலும் வைக்க முடியாது. விவசாய டைரக்டர், சர்க்கரை ஆலை சம்பந்தப்பட்ட ஸ்பெஷல் ஆபீசர் போன்ற அதிகாரிகளைப் போட்டு எந்த இடத்தில் வைக்கமுடியும் என்று பரிசீலனை செய்ததில், திருவண்ணாமலை பார்டரில் தான் வரும் என்று தோன்றுகிறது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, புதிய சர்க்கரை ஆலை லைசன்சுக்காக விண்ணப்பித்திருப்பதாக, தருமபுரி மாவட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். தேசிய நெருக்கடி காரணமாக ஏதாவது கால தாமதம் ஏற்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதிலே நெருக்கடி ஏற்படாது என்று நினைக்கிறேன்.

Cement Factory at Alankulam

* 511 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the stage to which the preliminary work connected with the setting up of a cement plant at Alankulam near Sivakasi, has progressed?

The Hon. Sri R. VENKATARAMAN : The land acquisition proceedings in respect of the lands required for the Cement Plant are in an advanced stage. Tenders for the supply of machinery for the Plant are under scrutiny of the Government.

கனி வளம்

* 512 **கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடசேல மாவட்டத்தில் கிடைக்கும் கனிப்பொருள்களைப் பயன்படுத்தும் பொருட்டு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

12th November 1965]

The Hon. Sri R. VENKATARAMAN : (a) Due to inadequacy of mineral resources, there is no proposal to start a mineral-based industry in Dharmapuri district.

(b) Does not arise.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, வட சேலம் என்று சொல்வதை விட தருமபுரி மாவட்டத்திலே அதிகமான சுண்ணும்புக் கல் கிடைக்கும், அதிலிருந்து சிமெண்ட் தொழிற்சாலை வைக்க வாய்ப்பு இருக்கிறது என்று முன்பு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்களுக்குக் கூட லைசென்ஸ் கொடுக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, தனிப்பட்டவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்தோ அல்லது அரசாங்கமோ ஒரு சிமெண்ட் தொழிற்சாலை வைப்பதற்கான முயற்சி எடுக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதலிலே ஓர் அளவுக்குக் கிடைக்கும் என்று நமக்கு எக்ஸ்பெக்டேஷன் இருக்கும். அதை வைத்துச் சொல்வது உண்டு. அடுத்தபடி, டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷன் செய்த பிறகு முடிவு செய்வது உண்டு. டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷனிலே பார்த்ததில், அங்கே அதிகமாக சுண்ணும்புக் கற்கள் இல்லை என்றும், அதுவும் நல்ல தரமுள்ளதாக இல்லை என்றும் தெரிகிறது. சிமெண்ட் செய்வதற்கேற்ற சுண்ணும்புக் கல் இல்லை. ஓரிடத்தில் 7 லட்சம் டன் இருக்கிறது. இன்னோர் இடத்தில் 50 ஆயிரம் டன் இருக்கிறது. மொத்தமாக 7½ லட்சம் டன் அளவுக்குத் தான் இருக்கிறது. இதை வைத்து ஒரு பெரிய தொழிற்சாலை ஆரம்பிக்க முடியாது. சுண்ணும்பு செய்கிற பாக்டரி வைக்க யாராவது முன்வந்தால், அதைப் பரிசிலிக்கலாம்.

திரு. ம. கமலநாதன் : சிறிய ரக சிமென்ட் தொழிற்சாலை, சிறிய ரக சர்க்கரை தொழிற்சாலை வைக்கும் திட்டத்தை ஊக்குவிப்பது என்ற முயற்சிகள் முன்பு நமது அரசாங்கத்திற்கு இருந்து வந்தது. பெரிய தொழிற்சாலையாக வைக்கவேண்டும் என்று கூடச் சொல்லவில்லை. சிறிய தொழிற்சாலைக்காவது ஊக்கம் அளிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யார் முன்வந்தாலும் ஊக்கம் அளிக்கப்படும். ஆனால், அங்கே கிடைக்கும் லைம்ஸ்டோன் சிமென்ட் தொழிற்சாலை வைப்பதற்கு அவ்வளவு எற்றதாக இல்லை என்று அறிக்கை தெரிவிக்கிறது.

* 513 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have proposed to set up a plant for extraction of magnesium useful for defence and aircraft industries from the magnesite deposits in Salem distirct; and

(b) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) & (b) There is a proposal to set up a production unit for the extraction of magnesium from magnesite. Details have not yet been worked out.